## திரும்பிய திசை எல்லாம் திருமங்கலம்; திருமங்கலம் தென்மதுரை வரை நீண்டது!




# தமிழ்நாடு ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு செலுத்தும் வரிகள் எங்கே போகிறது?

## ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயலுக்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சூடான கேள்வி!

திருமங்கலம்,ஏப்.6-

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (05-04-2026) மாலை, மதுரை திருமங்கலத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில், “அமைதியை விரும்புவதுதான் தமிழ்நாட்டின் D.N.A.! அதைச் சிதைக்க வேண்டும் என்று துடிப்பதுதான் NDA!” என்று குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் உரையாற்றுகையில், “தமிழ்நாடு அரசின் பணமெல்லாம் நேரடியாக மக்களுக்குத்தான் போகிறது. தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய அரசுக்கு கட்டும் வரிப்பணம் எல்லாம் எங்கே போகிறது? பியூஷ்கோயல் பதில் சொல்ல முடியுமா?” என்று கேள்வி எழுப்பினார்.**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

அன்புக்கும்-பண்புக்கும் - விருந்தோம்பலுக்கும் - பெயர்பெற்ற ஊர்! பாசாங்கு இல்லாத பாசமிக்க மனிதர்கள் வாழும் ஊர், நம்முடைய மதுரை! தமிழர்களின் பண்பாட்டுத் தலைநகர்! எப்போதும் ‘ஆக்டிவ்’வாக இருக்கும் ஊர், மதுரை! ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். இரவு 12 மணிக்குக் கூட ஆவி பறக்க சுடச்சுட இட்லி கிடைக்கும். அதனால்தான் “தூங்கா நகரம்” என்று சொல்கிறோம்!

தமிழ் இலக்கியத்தில் சிறப்பான இடம் கொண்ட ஊர்! கண்ணகி நீதி கேட்டு முழங்கிய மதுரைக்கு தமிழ்நாட்டை வஞ்சிப்பவர்களைத் தண்டித்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உழைப்பவர்களுக்கு வெற்றியைக் கேட்டு வந்திருக்கிறேன்! சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கான ஆதரவு கேட்டு வந்திருக்கிறேன்.

தலைநிமிர்ந்த தமிழ்நாடு, புது உயரங்களை அடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, உங்களின் பொன்னான வாக்குகளைக் கேட்டு வந்திருக்கிறேன். இப்போது நம்முடைய வெல்லும் வேட்பாளர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தப் போகிறேன்.

### எல்லோருடைய அன்பையும் பெற்றவர் அமைச்சர் மூர்த்தி!

முதலில், மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அமைச்சர் பி. மூர்த்தி அவர்கள். மதுரையில் மூர்த்திக்கு அறிமுகம் தேவையா? என்னுடைய அன்பை மட்டுமல்ல, உங்கள் எல்லோருடைய அன்பையும் பெற்றவர்தான் மூர்த்தி! அமைச்சராகப் பணியாற்றி, மாபெரும் சாதனைகளைச் செய்தவர்! தன்னுடைய துறையில் முத்திரை பதித்தவர். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் மீண்டும் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.



### சிந்தனைகளிலும் விவாதங்களிலும் பி.டி.ஆரை வீழ்த்த முடியாது!

அடுத்து, மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி. நம்முடைய வெல்லும் வேட்பாளர் அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராசன் அவர்கள். நீதிக்கட்சித் தலைவர்களுள் ஒருவரான, பி.டி.ராசன் அவர்களின் பேரன், பண்பாளர் கழகத்தின் மாண்பாளர் பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்களின் அருமை மகன் நம்முடைய பி.டி.ஆர்! சிந்தனையிலும் சரி, விவாதங்களிலும் சரி, பி.டி.ஆரை வீழ்த்துவது முடியாத செயல்! அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் மீண்டும் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

### மதுரை மாநகர் மாவட்டச் செயலாளராக நீண்ட காலம் பணியாற்றுபவர் தளபதி!

அடுத்து, மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதி. நம்முடைய வெல்லும் வேட்பாளர் கோ. தளபதி அவர்கள். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளராக இருந்து, தன்னுடைய உழைப்பால் உயர்ந்து, மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளராக நீண்ட காலமாகப் பணியாற்றி வருபவர். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

### திருமங்கலத்தில் வெற்றிக்கொடி ஏற்றப் போகும் சேடப்பட்டி மணிமாறன்!

அடுத்து, திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் சேடப்பட்டி மணிமாறன் அவர்கள். கழகத்தின் மூத்த முன்னோடியான சேடப்பட்டி முத்தையா அவர்களின் அருமை மகன். மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர். திருமங்கலத்தில் இந்த முறை கழக வெற்றிக்கொடியை நிச்சயமாக ஏற்றப் போகிறார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

### சோழவந்தான் தொகுதிக்கு சிறப்பாகப் பணியாற்றியவர் வெங்கடேசன்!

அடுத்து, சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் ஆ.வெங்கடேசன் அவர்கள். கிளைக் கழகச் செயலாளராக இருந்து உயர்ந்த செயல்வீரர். ஆதி திராவிடர் நலப்பிரிவு அமைப்பாளராக இருந்து, ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக உழைத்தவர். கடந்த முறை வெற்றி பெற்று சிறப்பாக தொகுதிக்குப் பணியாற்றியவர். தொகுதிக்கு நிறைய திட்டங்களைக் கொண்டு வந்தவர். மீண்டும் உங்கள் ஆதரவைக் கோரி நிற்கிறார். அவருக்கும் உதயசூரியன் சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

### அண்ணன் வைகோவின் அன்பைப் பெற்றவர் பூமிநாதன்!

அடுத்து, மதுரை தெற்கு சட்டமன்றத் தொகுதி. நம்முடைய வெல்லும் வேட்பாளர் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பூமிநாதன் அவர்கள். என்னுடைய ஆருயிர் அண்ணன் வைகோ அவர்களின் அன்பைப் பெற்றவர். பொடா சட்டத்தில் கைதாகி, அண்ணன் வைகோ அவர்களுடன் 19 மாதங்கள் சிறையில் இருந்த தியாகத்திற்குச் சொந்தக்காரர். ‘உறங்காப் புலி’ மூக்கையாத் தேவருக்கு மணிமண்டபம் அமைக்க சட்டமன்றத்தில் குரல் கொடுத்தவர். அவருக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

### கொள்கைப் பற்றாளர் மதுரை மேற்கு ரகு பாலாஜி

அடுத்து, மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் வழக்கறிஞர் ரகு பாலாஜி அவர்கள். சட்டக் கல்லூரி மாணவராக இருந்த காலத்தில் இருந்து கழகப் பணியாற்றி வரும் கொள்கைப் பற்றாளர். வழக்கறிஞர் அணி - இளைஞரணி என்று வளர்ந்து, இன்றைக்கு வடக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினராக இருக்கிறார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

### சமூகச் சேவையில் பெரிதும் நாட்டம் கொண்ட திருப்பரங்குன்றம் கிருத்திகா தங்கப்பாண்டி!

அடுத்து, திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி. நம்முடைய வெல்லும் வேட்பாளர் திருமதி கிருத்திகா தங்கபாண்டி அவர்கள். மாவட்டக் கவுன்சிலராக இருந்து, மகளிரை தொழில்முனைவோர் ஆக்கும் முன்னெடுப்புகளை செய்து கொண்டிருக்கிறார். மகளிருக்கு மருத்துவ முகாம்கள், கட்டணமில்லா ஓட்டுநர் பயிற்சி உள்ளிட்ட சமூகச் சேவைகளை அதிகமாகச் செய்யும் அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தந்து வெற்றி பெற வைக்க வேண்டும்.

### காந்திய உணர்வு கொண்ட இளைஞர், உசிலம்பட்டி சரவணக்குமார்!

அடுத்து, உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி. என்னுடைய அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கும் நம்முடைய வெல்லும் வேட்பாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் சரவணக்குமார் அவர்கள். விடுதலைக்காகப் போராடிய குடும்பத்தில் பிறந்தவர். காந்திய உணர்வு கொண்ட இளைஞர். அவருக்கு கை சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

### மக்கள் பணியாற்றியவர், மேலூர் விஸ்வநாதன்!

அடுத்து, மேலூர் சட்டமன்றத் தொகுதி. என்னுடைய அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களால் இன்று மாலை அறிவிக்கப்பட்டிருக்கும் நம்முடைய வெல்லும் வேட்பாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த விஸ்வநாதன் அவர்கள். காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து, மக்கள் பணியாற்றியவர். மதுரையில் குடியிருக்கும் அவருக்கு, மேலூர் தொகுதி மக்கள் கை சின்னத்தில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

### நம் வெற்றி உறுதியாகி விட்டது!

இங்கு மேடையில் நிற்கும் 10 பேரின் வெற்றியையும், நீங்கள் உறுதி செய்துவிடுவீர்களா? வெற்றி உறுதியா? (“உறுதி உறுதி” என கூட்டத்தினர் பெருங் குரல்!) நன்றி. வெற்றி உறுதி ஆகிவிட்டது. வேட்பாளர்கள் உட்காரலாம்.

தொடர்ச்சி 6–ஆம் பக்கம்

## மதநல்லிணக்கத்தோடு வாழும் மகத்தான மாடல்!

**ஆங்கிலப் பத்திரிகைகள் எல்லாம் என்ன எழுதினார்கள் தெரியுமா? “மதுரையைத் தென் தமிழ்நாட்டின் வளர்ச்சி மையமாக மாற்ற வேண்டும் என்று ஸ்டாலின் முடிவு செய்துவிட்டார். அதற்கான திட்டங்களை நிறைய கொண்டு வந்துகொண்டே இருக்கிறார்” என எழுதினார்கள். நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்–இல் இந்தச் செய்தி வந்திருக்கிறது. இப்படி மதுரைக்கான வளர்ச்சியை முன்னெடுக்கும் மாடல்தான் திராவிட மாடல்! மகளிரை முன்னேற்றும் மாடல்! இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றும் மாடல்! முதியோர்களுக்கு அன்புக்கரம் நீட்டும் மாடல்! எல்லாவற்றிற்கும் மேல், அனைத்து மக்களும் மதநல்லிணக்கத்தோடு வாழ்வதற்கான, மகத்தான மாடல்!**